சென்னை—திருச்சிராப்பள்ளி எக்ஸ்பிரஸ்

*293 கேள்வி.—திரு. எஸ். மணி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சென்னையிலிருந்து திருச்சிக்கு பெரம்பலூர் வழியாகச் செல்லும் அரசாங்க பஸ்ஸுக்கு 1965 ஜூலை முதல் வாரத்தில் ஏதேனும் சேதம் ஏற்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(உ) எந்த இடத்தில் சேதம் ஏற்பட்டது?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) On 4th July 1965, at about 15-40 hours, the Madras State Transport Express bus, fleet No. X5 (MSX 8617) proceeding from Tiruchirappalli to Madras, dashed against the rear of a private bus MDF 2321 owned and operated by the Ex-Servicemen's Transport (Private) Limited, near the bus stand at Perambalur. Three out of the 33 passengers in the State Transport bus were slightly injured. They were given first-aid and taken to the Government Hospital at Perambalur. They were treated as out-patients. Immediate arrangements were made for a relief bus.

(c) The accident occurred near the Perambalur Bus-stand.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்போது நீண்ட தூரம் செல்லக்கூடிய பஸ்களில் விபத்துகளைத் தடுக்க மேலை நாடுகளில் இருப்பதுபோல் ஒரு பஸ்ஸில் இரண்டு பேரை டிரைவராகப் போட்டு, ஒரு குறிப்பிட்ட தூரம் வரை ஒரு ட்ரைவர் ஓட்ட வேண்டும் என்ற யோசனையை அரசாங்கம் பரிசீலிப்பதாக ஏற்கெனவே தெரிவித்ததே, அந்த யோசனை எந்த நிலையில் இப்போது இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது அந்த மாதிரித்தான் இருக்கிறது. ஒருவருக்கு எத்தனை மணி நேரம் வேலை என்று நிர்ணயம் செய்திருக்கிறது. அந்த அளவுக்கு அவர்கள் ஓட்டுகிறார்கள். மற்ற இடங்களிலும் ரிலீப் கொடுக்க ஏற்பாடு இருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : தூர பஸ்களை ஓட்டிச் செல்லுகிற ட்ரைவர்களுக்கு கொடுக்கப்படுகிற படி குறைவாக இருக்கிறது என்று அரசாங்கத்திற்கு விண்ணப்பம் வந்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எப்போதும் விண்ணப்பம் வரும். ஆனால், இருக்கிற நிலைமையைப் பார்த்து நியாயமான படி நிர்ணயம் செய்து இருக்கிறோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, தூர பஸ்களை இரவு நேரத்தில் விடும் யோசனை உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது அந்த உத்தேசம் இல்லை. இரவில் விட்டால் விபத்துக்கள் அதிகமாக ஏற்படும் என்று சர்க்கார் கருதுகிறது.